ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

महिम्नस्ते पारं विधिहरफणीन्द्रप्रभृतयो
विदुर्नाद्याप्यज्ञश्चलमतिरहं नाथ नु कथम् ।
विजानीयामद्धा नलिननयनात्मीयवचसो
विशुध्यै वक्ष्यामीषदपि तु तथापि स्वमतितः ॥

विष्णुमहिम्न ॥

முவ்வுலகங்களுக்கும் நாதராய் விளங்கும் ஹேவிஷ்ணோ! உம்முடைய அபாரமானமகிமையினுடைய எல்லையை மிகப் பிரஸித்திபெற்ற பரமேசுவரன் பிர்மா இரண்டாயிரம் நாவு கொண்ட ஆதிசேஷன் முதலானவர்கள் வெகு காலமாய் சிரமப்பட்டுப் பார்த்தும் இன்றுவரையிலும் அறியவில்லை. அவ்விதமிருக்க அறிவில்லாதவனும் சஞ்சலமான புத்தியுடன் கூடியவனுமான நான் எப்படி உமது மகிமையை அறிவேன். என்னால் நிச்சயமாய் அறிய முடியாதென்பதை நான் நன்கு அறிந்திருந்தபோதிலும் பங்கயமலர்போல் விளங்கும் கண்களையுடைய ஹே லக்ஷ்மீபதே! என் வாக்கிற்கு சுத்தி ஏற்படவேண்டி என் புத்திக்கெட்டிய வரை அற்பம் கூறுகின்றேன்.

இதினால் எவ்வளவு புத்திமான்களாயிருந்தாலும் பகவனுடைய குணங்களைப் பற்றி பொற்ற முன்வருங்கால் நாம் சகல குணங்களை நன்கறிந்திருக்கிறோம்; என்று அகங்காரப்படுவதற்கு அற்பமேனும் நியாயமில்லை என்றும் ஆனாலும் அவரவர்கள் புத்திக்கெட்டியவாறு பகவானை ஸ்தோத்திரம் முதலானவைகளால் ஆராதித்தால் அவர் அதினாலும் திருப்தியடைந்து பக்தர்களை அனுக்கிரகிக்க சித்தமாயிருப்பதால் சக்திக்கியன்ற வரையில் பகவதாராதனத்தைச் செய்து யாவரும் ஜன்மஸாபல்யத்தைப் பெறவேண்டுமென்று போதிக்கப் படுகின்றது. சுபம்!

ஆர்யதர்மம் பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

குரோதன-௵ மார்கழி-௴ ௧௦௳


## பெண்குழந்தைகளை மிஷனெரி ஸ்கூலுக்கு அனுப்புவதால் உண்டாகும் அனர்த்தம்.

நம்மவர்கள் இவ்விஷயத்தை இலேசாகஎண்ணுமல் மிகக்கவனமாய் யோசிக்கக் கடவர், பாதிரிமார் தங்களுடைய பாடசாலைகளில் நம்முடைய பெண்களைப் படிப்பிக்கும் காரணத்தை பகிரங்கமாய்ச் சபைகளிற் பேசியே படிப்பிக்கின்றார்களென்பதையும்அக்காரணம்இன்னதென்பதையும் பலபண்டிதர்கள் அறிந்திருக்கலாம். அவர்கள் அப்படிக்கெல்லாம் பாடுபடவேண்டியது அவர்களது கடமைதான். ஆனால் அதனை அறியமுயலாது சோம்பலுற்று அசமந்தமாயிருத்தல் நமதுகடமையாகாது. சர்வலக்ஷணங்களும் பொருந்தி விளங்குவது நமது வேதாகம சாஸ்திரங்களாகும். அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கும் நமது மதாசாரங்களையும் குடும்பங்களையும் கலைத்து மிலேச்சாசாரங்களை நம்மவர்க்கு வருவிக்கக் கருதியே நமது மதவைரிகள் முயன்று வருவது யாவரும் அறிந்த விஷயம். அம்முயற்சி பலிதமாக நம்முடைய பெண்களை அவர்களது வழியிற் பழக்க வேண்டுவது அத்தியாவசியமென அவர்கள் கண்டார்கள். ஆனதுபற்றியே நம்முடைய பெண் குழந்தைகள் அவர் வைக்கும் பள்ளிக்கூடம் தேடிப் போவதற்கான பல நயங்களைக் காட்டுகின்றவராயினர். பொம்மை முதலிய விநோத விளையாட்டுப்பொருள்கள், துட்டு, தின்பண்டங்கள் ஆகிய இவைகுழந்தைகளையும்அவர்களைப் பயந்த பேதைத்தாய் தந்தையரையும் மயக்கும் கருவிகளாம். வெள்ளைக்காரர்கள் வெகு தந்திரசாலிகள். அதை யறிந்து கொள்ளாத நாம் தான் பக்ஷிகள்.

இராஜாங்கத்தார் பாடசாலைகளேற்படுத்தி நம் மக்களைப் படிப்பிப்பது ஸகஜம். அதற்கு ஒருவரும் குறைவு சொல்லப்படாது மிஷனெரிகள் பெருநிதிகளைச்சேர்த்துப்பாடசாலைகள், ஜனுை மிஷன் மிஷன் முதலியவை ஏற்படுத்துவது யாதுக்கு? அவர்கள் மதாசாரங்களைப்போதிக்கவும், நமதுமதாசாரங்களைச் சேதிக்கவும் அன்றோ? வேடன் ஒருவன் நெடுந்தூரத்திலுள்ள காட்டிற்குச்சென்று அங்கு வசிக்கும் பக்ஷி மிருகங்களுக்கு இரையிடுகிறான். அந்த இரையைப் பக்ஷி மிருகங்கள் புசித்துச் சுகித்துத் தத்தம் இச்சையிற்றிரியட்டும் என்று அங்ஙனம் செய்கின்றான்? இந்த உண்மையை நம்மவர் அறியாமல் ஏன் கண்மூடிகளாகின்றனர்? அறிஞர்களும் ஏன் இந்த உண்மையை அறியமாட்டேன் என்கின்றனர்? விசேஷ போதகர்கள் அழியாப் பெருநிதி படைத்து, எடுத்த காரியத்தை விடாது சாதிக்க வல்லோராய் வலியவந்து "உங்களுடைய மக்களுக்குக் கல்வியளித்து உபகரிக்கின்றோம்" என்று கெஞ்சிக் கேட்கிறார்களே என்றால் பக்ஷிகள் சுலபமாய் அகப்படுவதாயிருந்தால் வேடன் ஏன் 'வலிய வந்து' வலையை வீசான்? ஆங்கிலேய நாட்டில் தங்களது சொந்த ஜாதியார் பலர் கஞ்சிக்கும் கல்விக்கும் அலைய, அவர்களை விடுத்து இவ்வளவு தூரம் ஏன் வலியவந்து நம்மைக் 'கெஞ்ச' வேண்டும்? நம்மக்கள் அவர்களது பாடசாலைகளிலும் ஜனுை, மிஷன் முதலியவைகளிலும் கல்விகல்லாது மூடராயிருப்பதனால் சுவிசேஷபோதகரும் மற்றைக் கிரிஸ்தவர் கூட்டத்தவரும் உண்ணும் போஜனம் ஜீர்ணத்துக்கு வராமலா அப்படிக்கெல்லாம் கெஞ்சிக் கேட்கின்றார்கள். அவர்கள் 'கெஞ்சி,க் கேட்கும் காரணம் நோக்கியே நாம் அஞ்சிப் பிழைப்பதை விடுத்துஇஞ்சிதின்ற குரங்குகள் போல் அனர்த்தம் வந்தபின் விழிக்க ஏன் இடந்தால் வேண்டும்? அந்தோ! நம்மவரறியாமை அநியாயம்! அநியாயம்!

தொடரும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

# குருபக்தி.

(எ௲௦-வது பக்கத்தொடர்ச்சி.)

இவன்பிக்ஷாசரணம்பண்ணினபிறகுகுருவினிடத்தில் நிவேதனம் செய்தகாலத்தில்அதைஎல்லாவற்றையும்தான் அங்கீகாரம்செய்து இவனை கந்தமூலபலங்களை ஆஹாரம் செய்யும்படியாக ஆக்ஞாபித்தார். அந்த பக்தன் அதைத் தவறாமல் செய்தான். ஒரு நாள் தினம் அவனுடைய ஆஹாரத்திற்குள் எருக்கம் பழுப்பு அகப்பட்டுவிட்டது. அதனால் அவனுடைய கண்கள் பொட்டையாய் விட்டது. அதையும் கவனிக்காமல் அந்த குருபக்தன் ஸமிதாகரணம் குருசுச்ரூஷை முதலிய காரியங்களைத் தவறாமல் செய்து வந்தான். உடனே அவனுடைய குருவானவர் ஸந்தோஷித்துப் பூர்ண அனுக்கிரஹம் செய்தார். நீ ஸர்வக்ஞனாகக்கடவாய். நேத்திரம் தெரியட்டும் என்று அனுக்கிரகித்தார். உடனே உதங்க மஹரிஷியாய் ஆகிவிட்டார் என்று சரித்திரம். இந்தக் கதையினால் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால் எவ்வளவு சிரமம் வந்தபோதிலும் குருபக்தியைக் கைவிடக்கூடாது என்பதுதான். குருபக்தியினால் ஸகல காரியங்களையும் ஸாதிக்கலாம். குருபக்தியில்லாத பக்ஷத்தில் ஒன்றும் பிரயோஜனமில்லை. தெய்வம்கூட குருபக்தி இல்லாதவனிடத்தில் கிருபை செய்கிறதில்லை என்று தெரிவிக்கிறார்கள். பகவானுக்குக் கோபம் வரும் காலத்தில் குருவானவர் ரக்ஷிப்பார். குருவுக்குக் கோபம் வரும் பக்ஷத்தில் ரக்ஷிப்பதற்கு ஒருவருமில்லை என்று சொல்லுகிறது.

**शिवे रुष्टे गुरुस्त्राता गुरौ रुष्टे न कश्चन ।**

என்ற ஸ்மிருதி. தவிர குருவினுடைய பூர்ண அநுக்கிரகத்தால் குருவினால் சொல்லப்படாத அர்த்தம் கூட தெரிந்துவிடும் என்று சொன்னார்கள்.

**यस्य देवे पराभक्तिर्यथा देवे तथा गुरौ ।**
**तस्यैते कथिताह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥**

என்றது வேதம் சுருதிஸ்மிருதி புராணங்கள் இவைகளை ஆராய்ந்து பார்க்கும் காலத்தில் நாம் உத்தாரணத்தை அடைவதற்கு குரு

வைத்தவிர வேறு கதியில்லைஎன்பது நிச்சயம். ஆகையால் மநுஷ்ய ஜன்மாவை அடைந்த ஒவ்வொருவர்களும் குருபக்தியைக்கைவிடக்கூடாது என்பது என்னுடைய பிரார்த்தனை. (நிற்க) ஒரு ஜீவனை உத்தாரணம் பண்ணின குருவுக்கு மஹிமை என்றால் லோகம் அக்ஞானமாகிற ஸமுத்திரத்தில் மக்னமாயிருக்கும் காலத்தில் கருணையால் மநுஷ்யரூபத்தை அடைந்து ஸகல ஜீவர்களுக்கும் ஏற்பட்ட துக்கத்தை நிவர்த்தி செய்து ஆத்யந்திகமான பரம புருஷார்த்தமாயும் ஆனந்த ரூபமாயும் விளங்காநின்ற மோக்ஷமாகிற புருஷார்த்தத்தை உபதேசித்து எல்லோரையும் கடைத்தேறும்படியாய் செய்தவர்களான பரம குருவினிடத்தில் நாம் எப்படிப் பக்தியைச் செலுத்த வேண்டும் என்பதை ஆஸ்திகர்களான நாம் புத்தியினால் தீர்க்காலோசனை செய்யவேணும். சில வித்வான்கள் இப்படிப்பட்ட லோக குருவான பரமாசார்யர்களுக்குச் சில விஷயங்களில் நம்மைச் சீர்திருத்தம் பண்ணுவதற்கு அதிகாரம் உண்டு. சிலவற்றில் அதிகாரம் இல்லை என்று உபதேசிக்கிறார்கள். அவர்கள் வார்த்தையைப்பார்க்கும் காலத்தில் பாதி கிழவி பாதியுவதி என்று சொல்பவனுடைய புத்தி போல் இருக்கிறது. ( अर्धजरतीयं ) என்கிற நியாயத்தை ஆச்ரயிக்கிறார்கள், அது பிசகு அதற்கு சாஸ்திரப் பிரமாணமாக வசனங்களுமில்லை. ஆகையால் ஆஸ்திகர்களே நம்முடைய பெரியவாளுடைய ஆசீர்வாத பலத்தினால் நமக்கேற்பட்டிருக்கிற குருபக்தியைப்போலிவித்வான்களுடையவார்த்தையை நம்பி மோசம் போய்விடாதீர்கள். நம்முடைய மதம் நம்முடைய புண்ணியம் நம்முடைய க்ஷேமம் இவைகளுக்குக் காரணம் நம்மை ரக்ஷிக்கும் குருபக்தியே. இந்த குருபக்தியினுடைய அபிவிருத்தியை உத்தேசித்து நம்முடைய குழந்தைகளுக்கு பிரும்மசர்யாச்ரமத்தை கூடியமட்டும் ஒழுங்காய் நடக்கும்படியான யத்நம் நாம் செய்யவேண்டியது. அப்பொழுதுதான் நம்முடைய புத்தியானது நீடித்து ஒழுங்காய் சாஸ்திர மார்க்கத்தைத் தாண்டாமல் குருபக்தியோடு கூடவேஇருந்து இந்து மதத்தைச் செழிக்கும்படியாய்ச் செய்துவரும் என்பதில் ஸந்தேகமில்லை என்று நம்புகிறேன்.

ராமாயணம் ஸேதுராமய்யர்.

நாகபட்டணம்.

# கடவுள்.

शास्त्रं शारीरमीमांसा देवःश्रीचन्द्रशेखरः ।
आचार्याश्शङ्कराचार्याः सन्तु मे जन्मजन्मनि ॥

"தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்" என்றும் திருவாக்கு நமது ஞான மாதாவாகிய ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய தென்பது நாம் பள்ளியில் கல்விபயிலும் காலம் முதலே நன்ருய் அறிந்த விஷயம். ஆயினும் அதன் உண்மைக் காரணத்தை உணர்ந்து அம்மூதாட்டியின் அருள் வாக்கின்படி நடப்போர் சிலரே என்றுதான் சொல்லவேண்டும். நன்ருய்ப் பார்க்கப்புகின் கல்விப்பயிற்சியும் பெரியோர்களின் பழக்கமும் சாஸ்திர ஆராய்ச்சியுமில்லாத பாமர ஜனங்களின் பெரும்பாலோரே மேற்கண்ட வாக்கியத்திற்கு மாறுபாடாக நடக்காதவர்கள் என்பது விளங்கும். அவர்களேனும் மூட பக்தியோடு "அடே தெய்வம் எல்லாம் ஒன்றுதான்" என்று கூறி 'விஷ்ணுவாயினும் சரி, சிவபெருமானுயினும் சரி,' என்று மனதாரக்கை எடுத்து நமஸ்காரம் செய்து வருகிருர்கள். சிலர் ஏதோ சிவமதநூல்களை உலககௌரவத்துக்காகவாவது மேல் போக்காய் வாசித்துவிட்டு மதசம்பந்தமான பட்டப்பெயர்களை வைத்துக் கொண்டு பரம்பொருளின் நிலைமையை நேரே போய் கையால் தடவிப்பார்த்து வந்தவர்களைப்போல் ஒருவரோடொருவர் வீணுகக் குதர்க்கவாதங்கள், தேவதூஷணை முதலியவைகளைச் செய்துகொண்டு ஆங்காரம் கொண்டு கைச்சண்டை வரையில் போட்டுக்கொள்கிருர்கள். உண்மையில் வேதாந்த மார்க்கமாய் முக்தியடைந்த மகான்கள் எண்ணிறந்தோர். பரம் பொருளின் நிலைமை இவ்வாறென வேதங்களில் கூறியிருப்பதுபோல் வேறு எந்த கிரந்தங்களிலும் கூறப்படவில்லை என்பது உண்மை.

அந்தக் கடவுள் ஒருவரே. அவர் எங்கும் நிறைந்தவர். எல்லா மதங்களினுலும் போதிக்கப் படுபவர். நாம் செய்யும் பிரார்த்தனையை எந்தக்கடவுள் ஏற்றுக்கொள்கிருரோ அவரே மற்ற

எல்லா மதஸ்தாகளுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக்கொள்கிறார். ஆறுகளனைத்தும் எங்கெங்கே உற்பத்தியாகி எந்தெந்த திக்குகளிலே ஓடினாலும் முடிவில் கடலையே சேருகின்றன. எந்தெந்த மதஸ்தர் அவரை எவ்வாறு எவ்வாறு பாவித்து எந்தெந்த நாமத்தால் ஸ்தோத்திரம் செய்தாலும் எல்லாருடைய துதியும் அவர் ஒருவரையே போய்ச்சேருகிறது. நாமரூபமாயுள்ள எல்லர்வஸ்துக்களும் அழியத்தக்க அநித்தியப் பொருள்களே.

எல்லாவற்றிலும் நிறைந்திருக்கும் ஸர்வவியாபியாயிருக்கும் அப்பரம் பொருள் ஒருவரே என்றும் அழியாது முக்காலத்திலும் இருப்பவர். அவர் நமக்குள்ளுமிருப்பதால் 'நாம்' என்ற வஸ்துவை அறிந்தால் அவரை அடையலாம் என்பதே. வேதமுடிவு அழியத்தக்க எல்லா வஸ்துக்களிலும் நிறைந்துள்ள அழியாத நித்தியப்பொருள் அவரே யாதலால் ஞானிகளுக்கு எங்கும் நிறைந்த ஏகவுருவாகிய பரம்பொருள் ஒன்றே விளங்கிக் கொண்டிருக்கிறது. வேறு எப்பொருளுமில்லை. 'பிரக்லாதர்' 'தூணிலும், துரும்பிலும்,' பகவான் இருக்கின்றார் என்று கூறி அவ்வாறு மெய்ப்பித்ததே திருஷ்டாந்தமாகும்.

ஆகையால் அப்பொருளை நாம் பிரதிதினமும் தியானம் செய்யவேண்டும். அதற்கு இரண்டு முறையுண்டு. ஒன்று ஆலயம் முதலியவைகளில் சென்று அதனுள் மந்திர சக்தியினால் அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரஹத்தைக் கண்டதும் அதை ஸாக்ஷாத் எம்பெருமானாகவே பாவித்து அவருக்குரிய சகல ஸ்தோத்திரங்களையும் செய்வது. இவ்வாறு அவ்விக்கிரகங்களுக்குச் செய்யும் ஸ்தோத்திரங்களையும் உபசாரங்களையும் நாம் சர்வேசுவரனான கடவுளுக்கே செய்வதாகக் கருதுகிறோம். உண்மையும் அவ்விதமே அப்படிக்கிருக்க நாகரிகத்தில் முதிர்ந்து விட்டோமென்றுசொல்லிக்கொள்ளும் அனேகர், "ஆலயத்திலிருப்பது செம்பாலும் கல்லாலும் உண்டாக்கப்பட்ட மானிடரூபமான விக்கிரஹமேயன்றி அதற்கு நம்மை இரக்ஷிக்கக்கூடிய சக்தியில்லை; அதை வணங்குவதால் யாதொரு பயனும் கிட்டாது. அதற்குச் செய்யும் உபசாரங்களும் ஸ்தோத்திரங்களும் வீணானவைகள்" என்று சொல்லி இவ்வுலகத்தை முற்றிலும் மறந்து 'தன்னை' அறிந்து

சதா ஈசனைத் தியானம்செய்து தாம் அடைந்த நிலைக்கேற்ப மகான்கள் திருவாய் மலர்ந்தருளிய சில திருப்பாடல்களை ஆதாரமாகக்கொண்டு ஆலயத்தைச் செல்வோரை எளனம் செய்கிறார்கள்.

மேலும் அவர்கள் "கோவிலுக்குப்போய்த்தான் கடவுளை ஸ்தோத்திரம் செய்யவேண்டுமோ; கடவுள் கோவிலில் மாத்திரம் தான் இருக்கிறாரோ? கடவுள் ஸர்வவியாபிதானே. அவர் தாம் எங்குமிருக்கிறாரே. நாம் எங்கிருந்து வேண்டுமானாலும் தியானம் செய்யலாமே. மகான்களெல்லோரும் இருந்த இடத்திலிருந்து தியானம் செய்யவில்லையா" என்று மனம்போன போக்கெல்லாம் சொல்லுகிறார்கள்.

வாஸ்தவந்தான். நாமும் அம்மகான்களின் நிலைமையை அடைந்து விட்டோமோனால் ஆலயத்திற்குப் போகவேண்டியது அவசியமில்லை என்பது ஒப்புக்கொள்ளத் தக்கதே.

அம்மஹான்கள் எல்லாவற்றையும் வெறுத்தவர்கள் தன்னை அறிந்தவர்கள். அவர்கள் ஈசுவரத்தியானத்தைத் தவிர வேறு ஒன்றையும் மேற்கொள்ளாதவர்கள். ஊண், உறக்கம் முதலியவைகளை வெறுத்தவர்கள். அவர்களுக்கு விக்கிரக வணக்கமே அநாவசியம். இவ்வுலகத்தில் ஒரேவர்க்கத்தைச் சேர்ந்த தோட்டிக்கும், சக்ரவர்த்திக்கும் எவ்வளவு வித்யாசம் இருக்கின்றதோ அதைவிடப் பதினாயிரம் பங்கு அதிகமாக இவ்வுலக பாசத்தினால் கட்டுண்ட நமக்கும் பக்தியையே ஆபரணமாகப்பூண்ட மஹான்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றது.

'கடவுள் ஒருவர் இருக்கிறார்' என்று நமது இருதயத்தில் வேரூன்றுமளவும் நமக்கு விக்கிரக வணக்கம் அத்தியாவசியமே.

பாண்டவர்களுக்கு வில் வித்தையைக் கற்றுக்கொடுத்த துரோணரிடம் தனக்கும் அவ்வார்த்தையைக் கற்றுக்கொடுக்கும்படி ஏகலைவன் என்ற வேடன் வேண்டிக்கொள்ள, அவர் தாம் பாண்டவர்களுக்கு 'உங்களைத்தவிர வேறொருவருக்கும் வில்வித்தை கற்றுக்கொடுப்பதில்லை' என்று கொடுத்திருந்த வாக்கினால் கட்டிப்பட்டவராய்த் தனக்குக் கற்றுக்கொடாது நாட்கடத்தி வந்ததையறிந்த அவ்வேடன் சிலம்பக்கூடம் ஒன்றைக் கட்டி

அதில் துரோணரைப்போல் ஒரு விக்கிரகத்தைச் செய்துவைத்து வணங்கி நாடோறும் வில்லை அவ்விக்ரஹத்தின்கையில் கொடுத்து பிறகு எடுத்துத் துரோணர் சொல்லிக்கொடுப்பதாகவே பாவித்து வில்வித்தை முழுவதையும் கற்றுக்கொண்டதுமல்லாமல், துரோணர் வில்வித்தையில் தேர்ச்சிபெற்ற ஸவ்யஸாசி என்னும் அர்ச்சுனனுக்கு மட்டும் கற்றுக்கொடுத்திருந்த ஓரம்பு உடலெங்கும் பாயும்படியான அரிய வித்தையையும் கற்றுக்கொண்டானென்றும் கூறும் சரித்திரம் நம்மில் அனேகருக்குத் தெரிந்திருக்கலாம். அவ்வேடனுக்கு அரிய வில்வித்தையைக் கற்றுக்கொள்ளும்படியான அவ்வளவு திறமை எதன்மூலமாய் வந்தது? துரோணரைப்போல் செய்துவைக்கப்பட்ட விக்கிரகத்தின் மூலமாய்த்தானே. இன்னொரு திருஷ்டாந்தம். நமது சக்கரவர்த்தியின் படத்தைப் பார்த்து இகழ்ந்தோமானல் தண்டனைக்குள்ளாவோம். ஏன் ? 'அஃது உயிரற்ற படந்தானே, பேசச்சக்தியில்லையே' என்றால் அப்படத்தைச் சக்கிரவர்த்தியாகவே பாவிக்கிறோம். அதற்குச் செய்யும் ஒவ்வொரு மரியாதையும் சக்கிரவர்த்திக்கே செய்தவையாகும். அதுபோலவே கடவுளாகப் பாவிக்கப்படும் விக்கிரகத்தினிடம் செலுத்தும் பக்தியும் கடவுளுக்குரித்தானதே. சக்கிரவர்த்தியை நாம் நேரில் காணமுடியாமல் அவருடைய படத்தின் மூலமாய் எப்படி மரியாதை செய்கிறோமோ அப்படியே அரூபியான கடவுளையும் விக்கிரகத்தின் மூலமாய் வணங்குகிறோம். சக்ரவர்த்தியை நேரில் கண்டபிறகு படம் அவசியமில்லாதது போல் கடவுளின் பாதாரவிந்தத்தை அடைய முக்யஸாதனமாகிய பக்தியைமேற்கொண்டு அவர் உண்மை நிலையையறிந்தவர்களுக்கு விக்கிரகவணக்கமும் அநாவசியமாகும்.

ஆகையால் நாம் தினந்தோறும் ஒரு வேளையாவது ஆலயத்திற்குச்சென்று ஸாக்ஷாத் எம்பெருமானின் ஞாபகார்த்தமாய் அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்களின்மூலமாக அவரை வணங்கவேண்டியது அவசியந்தான். இவ்விதமான நோக்கத்துடனே தான் நமது முன்னோர்கள் ஏராளமாகப்பொருளைச் செலவுசெய்து ஆலயங்களைக் கட்டியும் அவைகள் என்றைக்கும் நடைபெற்று

வருவதற்காக ஏராளமான சொத்துக்களையும் இனமாகக்கொடுத்துமிருக்கிறார்கள். அவர்கள் ஏன் கொடுக்கவேணும் என்று யோசிக்குமளவில் அதன்மூலமாகக்கடவுள் திருப்தியடைந்து நல்லகதியைக்கொடுப்பாரென்பதே அவர்களுடைய இருதயமாகும். அவ்விதம் செய்யச்சக்தியற்றவர் மானஸிகமாகவும் காயிகமாகவும் ஈசுவரனைப்பூஜித்தல்வேண்டும். அதற்கு மனஸ் சுத்தி அவசியமாகவேண்டும். அதற்கு ஜன்மாந்தரவாஸனை முக்கியம். அது 'சுபம் அசுபம்' என்னும் இருவகையாகும். அவ்விருவகையான வாஸனைகளும் மனதைச் சுபாசுபவிஷயங்களில் ஏவிக்கொண்டேயிருக்குமாகையால் மனதை எந்த விருத்தியுமின்றி நிரோதம் செய்தலாகிய நிவர்த்திமார்க்கத்தை நோக்க இவ்விரண்டும் பிரதிபந்தகங்களேயாகினும் முதலில் அசுபவாஸனையை வென்றுவிடவேண்டும். அசுபவாஸனையை வென்றுவிடுவதற்குத்திடவிவேகத்தோடுகூடிய சுபவாஸநாப்பியாஸமேஸாதனம். ஆயினும் அவ்வசுபவாஸனையை ஸங்கற்பகாலத்திலேயே இடங்கொடுக்காமல் தடுத்துப்போடுவது நலம். ஸங்கற்பகாலத்தில் சற்றுவிட்டுவிட்டாலும் ராகத்வேஷங்களுக்காவது இடங்கொடாமல் தடுத்துப்போடவேண்டும். அன்றியும், திடவிவேகமே அசுபவாஸனையை வெல்லுவதற்கு உபாயமாயினும் (ஸங்கற்பத்தையுண்டாக்குவதற்கு) உரிய நிமித்தங்களையும் ஒழிக்கவேண்டும். அவையாவன:— அழகியமங்கை, இனிய உணவு, விசித்திரமான வஸ்திரம் முதலிய பொருள்களைக்கண்டதும், அவை தமக்கு வேண்டும் என்னும் அசுபஸங்கற்பமுண்டாகிறபடியால் அப்பொருள்களே அவ்வாஸனைக்கு ஆலம்பனம் என்பனவாம். அவ்வாலம்பனப் பொருட்களுக்கு இடமில்லாமல் சுபவாஸனைக்கு ஆலம்பனமாகும் பொருட்களுக்குப் பிரஸக்தி இருக்கும்படிக்குச் செய்துகொள்ளவேண்டும்.

(தொடரும்).

கே. ஆர். வைத்திநாதசாஸ்திரீ, மேலக்காவேரி.

# 2. ஸ்திரீ தர்மம்.

मनोवाक्कर्मभिः शुद्धा पतिदेशानुवर्तिनी ।
छायेवानुगता स्वच्छा सखीव हितकर्मसु ॥
दासीव शिष्टकार्येषु भार्या भर्तुः सदा भवेत् ।

மனத்தில் எண்ணுவதும், வாக்கால் உரைப்பதும், சரீரத்தால் செய்வதும் மூன்றும் ஒன்றுக்கொன்று மாறுபாடில்லாமல் ஒரே நோக்குக்கொண்டதாகச் சுத்தமாய் கபடின்றி ஸத்யமாய் நடக்க வேண்டும். தன் மணாளன் மனத்தால் நினைப்பதையும் வாக்கால் கட்டளையிடுவதையும் சரீர அங்கங்களால் குறிப்பிடுவதையும் ஊக்கமாய் அறிந்துகொண்டு, மனங்கோணாமல் பூர்த்திசெய்துவைக்க வேண்டும். இந்தஸமயம் ஸ்திரீ தன் எந்தக்கார்யத்தின்மத்தியில் தான் அமர்ந்திருந்தபோதிலும் தன் புருஷன் எந்த ஆக்ஞையிடுவனோவென்று மனத்துள் நினைத்திருப்பவள்போல் அவன் இருக்குமிடத்திலேயே கவனம் செலுத்தியிருந்து அவன் வாக்கில் கட்டளைபிறந்தவுடன் தன் கார்யத்தை அச்சமயம் இருந்தபடியே (அக்கார்யம் கெட்டுவிடுமேயென்றாவது அப்பதார்த்தம் வீணாய்விடுமே என்றாவது கவனியாமல்) வைத்துவிட்டு உடனே அவன் எதிர்பார்த்திருக்கும் நேரத்துக்குள்ளேயே அக்கட்டளைக் கார்யத்தை நிறைவேற்றிவைப்பாள். குறள்கூறிய வள்ளுவர் ஒருநாள் அவர் பத்நி சூட்டுக்கலத்தில் உலைநீர் வார்க்கவேண்டி கொல்லைக்கேணியில் நீர்க்குடம் தூக்கும்மத்தியில் வாவென்றுகூவ, அவள் அப்படியே பாதியில் விட்டுவிட்டுச் சென்று அவர் கட்டளையைப் பார்த்து முடித்துப் பின்வந்து அங்கேயே அந்தரத்தில் நின்றிருந்த நீர்க்குடத்தைத் தூக்கிச்சென்றாள். அன்று தன் நிழல் தன்னுடன் இருப்பதுபோல் புருஷனுக்குத்தானே நிழலென்று எண்ணுபவள்போல எந்தஸமயத்தில் வேண்டினாலும் புருஷனுக்குப்சரிக்கவேண்டும். கொஞ்சங்கூட மனதில் கல்மஷம், சூது, கெட்ட எண்ணம், ஏமாற்றம், தாங்கல்; வருத்தம், அன்னியனுக்குஉழைக்கவேண்டியிருக்கிறதே தனக்கு அவன் ஒன்றும் உபசரிக்கிறதில்

லேயே என்று வேற்றெண்ணம்கொள்ளுதல் முதலிய கலக்கங்களி ல்லாமல் நிர்மலமான சுத்தமான பிறந்தமேனிக்குள்ள இயற்கை யான மனது பொருந்தியிருக்கவேண்டும். ஒரு ஆப்தமான அந் தரங்கத்தோழி தான் எல்லாக்கார்யத்திலும்கூடியிருந்து உபகார மான ஸாதகமான கார்யத்தைச் செய்வாளோ அத்தன்மைபோல ஒரு ஸ்திரீ தன் புருஷனுடைய எல்லாக்கார்யங்களிலும் ஹிதமாக அநுகூலமாகவே அவனுக்குத் தோழர்போலஉபகரித்துவருவாள். புருஷன் செய்யும் கார்யங்களுக்கு உதவியாக வேலைக்காரிபோல் உழைக்கவேண்டும். இவ்விதம் ஒரு தர்மபத்நி தன்னைக்கொண்ட புருஷனிடம் நிழல்போலவும் தோழிபோலவும் வேலைக்காரிபோல வும் பலஸமயங்களிலும் பலவேஷங்கள்போட்டும் பலவிதமாகவும் அவனுக்குப் பரம உபகாரியாக இருக்கவேண்டும்.

ततोऽन्नसाधनं कृत्वा पतये विनिवेद्य सा ॥९॥
वैश्वदेवोद्धृतैरन्नैर्भोजनीयांश्च भोजयेत् ।
पतिं च तदनुज्ञाता शिष्टमन्नाद्यमात्मना ।
भुक्त्वा नयेदहः शेषं सदाऽऽयव्ययचिन्तया ॥

பாகசாலையில் புகுந்து சமையல் செய்து அன்னம் தயாரிக்க வேண்டியது. அன்னம் தயாராகிவிட்டது என்று கணவனிடம் தெரியப்படுத்த வேண்டும். புருஷன் அந்த அன்னத்தைக்கொ ண்டு வைச்வதேவம் செய்யவேண்டும். அந்த வைச்வதேவம் செய்த அன்னத்தைக்கொண்டு குடும்பத்திலுள்ள பாலர், விரு த்தர், வியாதிஸ்தர், கர்ப்பிணிகள் முதலியவர்களுக்குச் சாப்பாடு பரிமாறி அவர்களை உண்பிக்கவேண்டும். அதிதிக்கு அன்னம் போடவேண்டும். பிறகு தன் புருஷனுக்குப் போடவேண்டும். பிறகு புருஷன் உத்தரவுகேட்டுக்கொண்டு மீருந்த அன்னம் முத லியவைகளைத் தான் புசிக்கவேண்டும். பிறகு அன்று சொச்சப் பொழுதைக் குடும்பத்தினுடைய வரவுசெலவுகளைப்பற்றிச்சிந்திப் பதில் போக்கவேண்டும் பெரியோர்களால் சொல்லப்படும் புரா ணங்கள், ஸ்மிருதிகள், வேதக்கதைகள் இதுபோன்ற தர்மவிஷ யங்களைக் கேட்பதிலும், அவைகளைப்பற்றிச் சிந்திப்பதிலும் பொழுதுபோக்கவேண்டும். மேற்குறித்த இருவழியும் முடியாத

காலங்களில் இரண்டாவதில் குறித்த கிரந்தங்களைத் தன் வீட்டி லேயே வாசித்து மற்றவர்களுக்கு விரித்துரைத்துக் காலத்தைப் போக்கவேண்டும். அதுவும் தவறினல் காய்கள், சொக்கட்டான், சோழி, கழற்சிக்காய் முதலிய பொருட்கள் மூலியம் விளையாடி யாவது பொழுதுபோக்கவேண்டுமேயல்லாது தன்மனையிலேனும் பிறர் மனையிலேனும் இதர ஸ்திரீகளுடன் 'வம்பு' என்று பெயர் வாய்ந்த தும்பால் தன்னைப் பிறருடன் கட்டிக்கொண்டு, பிறர் தூஷணை, ஆத்மபூஷணை, கலகம், துரோகம், பொய்க்கப்பல், பெருஞ்சண்டை, ஏமாற்றத் தந்திரங்கள், திருட்டு வழிகள், வஞ் சனை, பட்டாடை பொன்னுபரணம், காபித்தொட்டி, தன் வீட் டைப்பற்றிய பெருமை, தன் மனைக்குழந்தைகளுக்குச் செய்திரு க்கும் பொருட்களின் வர்ணனை, பிறரைச் சண்டையிட்டுவிடத் துவக்கமுறைகள், புருஷர்களை வசப்படுத்தும் வழிகள், பிள்ளைக ளிடம் பொருள்பெற்றுப் பெண்களுக்கு ஆசைப் பொருட்கொடு த்து மாப்பிள்ளைகளைப் பிறந்த மனையினின்றும் பிரித்துத் தன்மனை யை நாடவிடும் முறைகள், தன் நாயகனைத் தூஷிக்கும் முறைகள் அலக்ஷயம் செய்யும் பாணிகள் இவை முதலான கணக்கிலடங் காத பழக்க வகைகளில் தன்னைப் பயிற்றுவித்தல் மிகத் தகாத காரியம்.

வைச்வதேவம் என்பது பகவானுடைய சிருஷ்டியில்சேர்ந்த அவருக்குச்சொந்தமான நவதான்யங்கள், காய்கறிகள்,ஜலம்இவை முதலிய பதார்த்தங்களை நாம் அன்னபானுதிகளாகப் பக்குவம் பண்ணுகையில் அந்தப்பதார்த்தங்களுக்குண்டாகும் உபத்திரவங் களுக்கு ஸமாதானம் செய்யும்பொருட்டு அவைகளின் அதிதெய் வங்களான பல தேவதைகளுக்கும் அந்த அன்னத்தை நாம் சாப் பிடுமுன் அந்தந்த தேவதைகளுக்குப் பலியிடுதல்.

**पुनःसायं पुनःप्रातर्गृहशुद्धिं विधाय च ।**
**कृतान्नसाधना साध्वी सभृत्यं भोजयेत्पतिम् ॥१०॥**

தினந்தினம் மாலையிலும் காலையிலும் வீட்டைச் சுத்திசெய்ய வேண்டியது. இரவில் போஜனம் தயாரித்துப் புருஷனுக்கும் வேலைக்காரருக்கும் போஜனம் போடவேண்டியது.

नातितृप्ता स्वयं भुक्त्वा गृहनीतिं विधाय च ।
आस्तृत्य साधु शयनं ततः परिचरेत्पतिम् ॥११॥

அதிக திருப்தியுண்டாகும்படியாக அளவுக்குமிஞ்சி சாப்பிடாமல் மிதபோஜனமாக அளவுக்குக்குறைவாகவே புஜிக்கவேண்டும். மிதபோஜனமென்றால் உண்ணும்பொழுது அரைபாகம் (கன) கட்டிபதார்த்தத்தாலும், கால்பாகம் ஜலபதார்த்தத்தாலும் மீதிக் கால்பாகத்தை வாயுவால் நிரம்பவிட்டுவிடுவதாலும் வயிற்றைப் பூரிக்கவேண்டும். அதாவது அன்னமும் தீர்த்தமுமாக முக்கால்வயறு நிறையும்வரையில் சாப்பிடுவது மிதபோஜனம் என்பது யோகசாஸ்திரத்திலும் போகசாஸ்திரத்திலும் கண்டுள்ளது. பிறகு வீட்டில் பாக்கிநிற்கும் இதரகாரியங்களைச் செய்து முடிக்கவேண்டும். அதன்பிறகு சுத்தமான படுக்கையைவிரித்து, நாயகன் படுத்ததும் அவனுக்குவேண்டிய உபசாரங்களைச் செய்ய வேண்டியது.

सुप्ते पत्यौ तदध्यास्य स्वयं तद्गतमानसा ।
अनग्ना चाप्रमत्ता च निष्कामा विजितेन्द्रिया ॥१२॥

[ısʟ புருஷன் உறங்கினபின் அவனையே மனதில் ஸ்மரித்துக் கொண்டுதான் தூங்கவேண்டும். ஆடையில்லாமலும் நிதானபுத்தியில்லாமலும் உறங்கலாகாது. போக இச்சையில்லாமலும் இந்திரியக்கட்டுடனும் தூங்கவேண்டும்.

नोच्चैर्वदेन्नपरुषं न वदारुतिमप्रियम् ।
न केनचिच्च विवदेदप्रलापविवादिनी ॥१३॥

உயர்ந்த குரலுடன் பேசவேண்டாம். கடும் வாக்கும் கோபக் குரலும் பிறருக்குப் பிரியமில்லாத சொற்களும் விலக்கப்படவேண்டும். எவருடனும் சண்டை சச்சரவுகளைச்செய்யவேண்டாம். வீண் வார்த்தைகள் வம்புகள் இவற்றைச் சொல்லவேண்டாம். அதாவது— பொறுமையையே மேற்கொண்டு கோபத்தை முற்றிலும் அடக்கிவிட்டு மிதமாகவே கார்யத்துக்குவேண்டிய அளவு

மட்டும் இதரர்களுக்கினிமையாகவும் பிரீதியாகவும் இருக்கும்படியாக மிருதுவான வார்த்தைகளைத்தணிந்தகுரலால்உரைக்கவேண்டும் ஸ்திரீஜனங்கள்.

न चास्याऽन्ययशीला स्यान्न धर्मार्थविरोधिनी ।
प्रमादोन्मादरोषेर्ष्या वचनान्यतिनिन्द्य ताम् ॥१४॥

கணவன் பொருளைச் செலவுசெய்து அழிக்கக்கூடாது. புருஷனுடைய தர்மகார்யங்கள் (தர்மம் என்றால் தானம் அல்ல. தர்மம் என்றால் ஒருவன் இப்பிறவியில் செய்யவேண்டிய நித்திய நைமித்திகர்மாக்கள்) பொருள் ஸம்பாதனகார்யங்கள் இவைகளுக்கு விரோதம் செய்யக்கூடாது. அதாவது அந்த தர்மார்த்த கார்யங்களுக்கு ஸகாயம்செய்யவேண்டும். கொழுப்பு, பித்து, திமிர் (எரிச்சல், கோபம்) ஆத்ரம்அஸூயைமுதலிய பொறாமைப் பெருமைகளடங்கிய வார்த்தைகளை நிந்திக்கத்தக்கவைகளென்று ஒதுக்கி இவ்வார்த்தைகளைத் தானும் பேசக்கூடாது. பிறர் பேசுவதைக் கேட்கவும்கூடாது. அவைகளை நிந்திக்கவேண்டியதேயொழிய ஆமோதிக்கக்கூடாது.

पैशुन्यहिंसाविषयमोदाहङ्कारदर्पताम् ।
नास्तिक्यसाहसस्तेयदम्भान साध्वी विवर्जयेत ॥१५॥

ஒரு ஸ்திரீ எப்பொழுதும் ஸாதுவாக (துஷ்டையென்ற பெயரெடுக்காமல்)வே இருந்து வாழவேண்டும். ஒருவள் தன்னை ஸாதுவாகவே இருக்கப் பழகிக்கொள்ளச் சிலவிதமாகத் தன்னை அடக்கிக்கொள்ளவேண்டும். அற்பபுத்தி, ஹிம்ஸை, ஒருவஸ்துவினிடத்திலேயே பித்துப்பிடித்ததுபோல் மோஹம் வைத்தல் தன் பெருமையைத் தானே நினைத்துக்கொண்டு அஹங்காரம் படைத்தல். தன்னைத்தானே கௌரவித்துக்கொண்டு கொழுப்படைதல். நமக்கு மேலான ஈசுவரன் இல்லவே இல்லை. தானே தனக்கு ஸர்வாதிகாரி என்ற நம்பிக்கை. தான் பிடித்தபடியே நடக்கப் பிடிவாதங்கொண்டு பக்கத்தோர்களைத் தனக்கிணங்கும்படி செய்தல். திருட்டுத்தனம், தன்னை யலங்கரித்துக்கொண்டு பொய்வேஷம்போடுதல் இந்த ஸகலவித விஷயங்களையும் முழுவ

தும் விட்டுவிடவேண்டும். இக்குணங்களை விடுவது அஸாத்திய மானாலும் இக்குணங்கள் தன்னிடம் எந்தெந்த ஸமயங்களில் வருகின்றனவோ அவ்வவ்வமயம் கவனித்து அவைகளை விலக்கித் தன்னை அடக்கிக்கொண்டே வந்தால் சில மாதங்களில் இந்த குணங்கள் பறந்தோட அவ்விடங்களில் பொறுமை, மேன்மை, ஸத்தியம், அடக்கம்முதலிய மேற்குணங்கள் தங்கி ஸாதுவாக்கும்.

(தொடரும்.)

ஸாரம், ரேங்காச்சாரியார்.

---

கும்பகோணம்

# ஸ்ரீசங்கரபகவத்பாதபக்தஜனஸபை.

இந்த ஸபையின் ஆதரவில் நாளது குரோதன-வரு மார்கழி மீ 1௳ முதல் சென்றவருஷங்களைப்போல் கும்பகோணம் டபீர் அக்கிரகாரத்திலுள்ள பக்தகோடிகள் அதிகாலையில் ஐந்துமணி சுமாருக்கு ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரா சார்யஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமடத்திலிருந்து புறப்பட்டு ஸ்ரீபகவந் நாமாவளி ஸ்ரீ பகவத்கீர்த்தனம் முதலியவைகளால் பக்தர்கள் மனம் உருகும்படி பஜனம் செய்து வருகிறார்கள். இவ்விதமே இந்ததனுர்-மீ பூராவும் மிகவும் பக்திசிரத்தையுடன் ஸ்ரீபகவதா ராதனம்செய்து வருகிற மகர-மீ (தை-மீ) 10௳க்குள் ஒரு சுப தினத்தில் ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவமும், பிராமணஸந்தர்ப் பணையும் பல ஆஸ்திகர்களின் உதவியைக்கொண்டு நன்குநடத்தி இவ்வருஷ பஜனைமஹோத்ஸவத்தை விமர்சையாகப் பூர்த்திசெய் வார்களென்று தெரிகின்றது. இவ்வித உத்தமமான பகவத் கைங் கர்யத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த பக்தகோஷ்டிகளுக்கு பக்தர் களைப் பக்ஷமுடன் ரக்ஷிக்கவேண்டுமென்று தீக்ஷைபூண்டிருக்கும் புண்டரீகாக்ஷரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் மேன்மேலும் நற்கார் யங்களில் விடாமுயற்சியையும் உத்ஸாகத்தையும் உண்டுபண்ணி அனுக்கிரகிப்பாராக. ஒருநிரூபர்.

---